## மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 872/2017** **நாள். 26.06.2023**

2023 ம் ஆண்டு ஜுன் திங்கள் 26 ம் நாள் மனுதாரர் தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பலராமன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | சக்கரபாணி | சாதி | |
| கிராமம் | முட்டத்தூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 54 |

**ம..சா.1**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் ஏற்கனவே என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் , ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன். அத்துடன் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**ஆவணங்கள்**

1. ம.த.சா.ஆ.11 - மனுதாரரின் சம்பள சான்றிதழ் அசல்.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று மனுப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

**குறுக்கு விசாரணை**

விபத்து சம்பந்தமாக என் மனைவி புகார் கொடுத்தார். 23.11.2017 ம் தேதி விபத்து நடந்தது . 25.11.2017 ம் தேதி புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எம்.சி.ஓ.பி எண். 686/2017 என்ற வழக்கில் இதே வழக்கு சம்பந்தமாக நஷ்டயீடு கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி வழக்கை நான் வாபஸ் பெற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் விசாரிக்கும் போது நான் விபத்து எப்படி நடந்தது என்று சொன்னேன். மருத்துவமனையில் மருத்துவரிடம் நான் இருசக்கர வாகனத்தை ஓட்டி செல்லும் போது வழிக்கி விழுந்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. விக்கரவாண்டி போலிசார் விபத்து சம்பந்தமாக 25.11.2017 ம் தேதி நான் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் இருக்கும் போது விசாரித்தார்கள்.

II. போலிவார் விசாரிக்கும் போது என்ன சொன்னேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலிசாரிடம் நான் விபத்து சமயத்தில் PY 01 AN 1328 Bajaj Discover என்ற வாகனத்தை கும்பகோணம் மெயின் ரோட்டில் ஓட்டி கொண்டு வரும் போது மாடு குறுக்கே வந்ததால் பிரேக் பிடிக்கும் போது விழுந்துவிட்டதாக சொன்னேன் என்றால் சரியல்ல. போலிசாரிடம் நான் கொடுத்த மேற்படி வாக்குமூலத்தின் அடிப்படையில் விபத்து சம்பந்தாக கொடுத்த புகார் உண்மையில்லை என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி இறுதி அறிக்கை சம்பந்தமாக என் மனைவிக்கு போலிசார் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தமாக 08.12.2017 ல் விக்கரவாண்டி குற்றவியில் நீதிமன்றத்தில் புகார் பிழையுடையது என்று போலிசார் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

III இவ்வழக்கில் புகார் கொடுத்த என் மனைவிக்கு விபத்து சம்பந்தமாக நான் தான் தகவல் சொன்னேன். போலிசார் TN 10 S 2965 என்ற வாகனம் சம்பந்தப்படவில்லை என்று இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக உதவி ஆய்வாளர் குமாரர் என்பவர் என்னை விசாரித்தார். மேற்படி குமார் என்பவர் தான் புகார் உண்மையில்லை என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் TN 10S 2965 ற்கும், இவ்வழக்கு விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் PY 01 AN 1328 Bajaj Discover என்ற வாகனத்தை ஓட்டி சென்று நானாகவே விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் லிப்ட் கேட்டு சென்றதால் வாகனத்தை ஓட்டியவர் யார் என்று எனக்கு தெரியாது. நான் சென்ற வாகனத்தைை ஓட்டியருக்கு லேசாக காயம் ஏற்பட்டது . அவர் சிகிச்சை எதுவும் பெறவில்லை.

IV புகார் பிழையுடையது என்று தாக்கல் செய்த இறுதி அறிக்கைக்கு எதிராக நான் தனி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் விபத்தின் போது தலைமை காவலராக பணிபுரிந்தேன். தற்போது சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். விபத்தினால்எனக்கு எந்த வருமான இழப்பு இல்லை என்றால் சரியல்ல. என் மருத்துவ செலவுகளை நான் பணிபுரியும் அலுவலகத்தின் மூலம் பெற்றுக்கொண்டேன் என்றாலும், அதனால் மருத்துவ செலவுகளை கோரமுடியாது என்றால் சரியல்ல. நஷ்டயீடு பெறும் தவறான நோக்கத்துடன் பொய்யான புகார் கொடுத்து அதன் அடிப்படையில் நான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவரிடமும், போலிசார் விசாரணையிலும்

நானாகவே விபத்து ஏற்படுத்தி கொண்டதாக சொல்லிவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு இறுதி அறிக்கை முக்கிய ஆவணம் என்று எனக்கு தெரியும். ஆனால் இறுதி அறிக்கையை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்திலும் உள்ள சான்றிட்ட உதவி ஆய்வாளர் யார் என்று எனக்கு தெரியாது. மேற்படி ஆவணங்களை என் மனைவி வாங்கியிருப்பார். எந்த தேதியில் மேற்படி ஆவணங்களை என் மனைவி வாங்கியிருப்பார் என்று எனக்கு தெரியாது. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் என்னால் பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.